DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 363/2018 DW : 2

Name : சந்திரசேகர் Age –

S/o: நாகப்பநாயுடு Village –

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 23.10.2025.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) 1ம் பிரதிவாதி என்னுடன் படித்தவர். அவருடைய தயாரை 25, 30 ஆண்டுகளாக தெரியும். அவருடைய தாயார் எழுதிய உயிலில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். உயிலை தயார் செய்து அவர் கையெழுத்து போட்டு பின்பு தான் அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் உயிலில் உள்ள பி.வா.சா.ஆ.25 என்னுடைய கையெழுத்து தான். அந்த சொத்தை 1ம் பிரதிவாதியின் தாயார் கமலம்மாளுக்கு அவருடைய தாயார் எழுதிகொடுத்த சொத்து ஆகும். மேற்சொன்ன உயில் மூலமாக 1ம் பிரதிவாதிக்கும், அவருடைய சகோதரிக்கும் எழுதிக்கொடுத்தார். அது சம்மந்தப்பட்ட வேறு எந்த ஆவணமும் நான் பார்க்கவில்லை. நான் ஆரணி சார் பதிவாளர் அலுவலகத்தில் தான் சாட்சி கையெழுத்து போட்டேன். அந்த உயில் படி 1ம் பிரதிவாதிக்கும் சொத்து வழங்கப்பட்டுள்ளது. உயில் எழுதும் போது கமலம்மாள் உடல்நிலை நன்றாக தான் இருந்தது. அவர் நேரில் வந்தார். உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் அன்னதான காக்கவாக்கம் கிராமத்தில் உள்ளது. அதன் விஸ்தீரணம் எனக்கு சரியாக தெரியாது. சுமார் 40 முதல் 45 ஏக்கர் இருக்கும்.

2) தற்போது நான் பொன்னேரியில் வசித்து வருகிறேன். என்னுடன் சாட்சி கையெழுத்து போட்ட ஜெயராமநாயுடு, தனஜெயன் ஆகியோர் தெரியும் நாங்கள்

ஒன்றாக தான் படித்தோம். நான் வேறு ஊர் சேர்ந்த நபர் என்றாலும், நான் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து படிக்கவில்லை என்றாலும், நான் 1ம் பிரதிவாதியின் ஊரை சேர்ந்தவர் கிடையாது என்றாலும், நான் உயிலில் சாட்சி கையெழுத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.10.23 17:06:40 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 363/2018 DW : 3

Name : ஜெயராமநாயுடு Age –

S/o: அக்கம நாயுடு Village –

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 23.10.2025.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) 1ம் பிரதிவாதி எனக்கு தெரியும், அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். நாங்கள் உறவினர் கிடையாது. உயலில் நான் 2வது சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.3–ல் முதல் சாட்சியாகவும், பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் இரண்டாவது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். பொட்டியம்மாளுக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3 ஆவணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் சென்றேன். அதில் பொட்டியம்மாள் கைரேகை தான் வைத்தார். பி.வா.சா.ஆ.3–ல் ஆவணத்தில் ராமசந்திரன் இன்னோறு சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார். தற்போது ராமசந்திரன் உயிருடன் இல்லை. பி.வா.சா.ஆ.3 யார் எழுதியது என்றால் எனக்கு ஞாபகமில்லை. தற்போது எனக்கு 75 வயது ஆகிறது. பி.வா.சா.ஆ.3 எழுதும் போது எனக்கு ஏறக்குறைய 30 வயது இருக்கும் என்றால் சரிதான். நான் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை படித்து பார்த்தேன் தற்போது எனக்கு ஞாபகமில்லை.

2) பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் மட்டும் தான் உள்ளதா அல்லது வேறு சொத்துக்களும் அதில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அதை நான் படித்து பார்க்கவில்லை. அந்த உயிலை படித்து காட்டினார்கள் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு எழுத படிக்க

தெரியும். கமலம்மாள் கையெழுத்து போட்ட பிறகு தனஞ்ஜெயநாயுடு அதில் கையெழுத்து போட்டுள்ளார். அவர் கமலம்மாளின் தங்கை மகன் ஆவார். நான் கையெழுத்து போட்ட பிறகு யார் யார் கையெழுத்து போட்டார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணம் நான் இருக்கும் போது எழுதப்பட்டது. இதை பதிவு செய்யும் போது நான் ஆரணி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். நான் உயிலை படித்து பார்க்காமல் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உயிலை பற்றிய முழு விவரமும் தெரியாமலும், அதன் சொத்து விபரமும் தெரியாமலும் என்னை கட்டாயப்படுத்தி கையெழுத்து போடப்பட்டது என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.10.23 17:06:49 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 363/2018 DW : 4

Name : ஸ்ரீனிவாசன் Age –

S/o: கண்ணையநாயுடு Village –

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 23.10.2025.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1ம் பிரதிவாதி என் தந்தையின் தாய் மாமன் மகன் ஆவார். நான் என் தந்தை கண்ணையநாயுடுவின் கையெழுத்தை அடையாள காட்ட தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தந்தை ஆங்கிலத்தில் எம்.ஆர்.கண்ணையநாயுடு என்று தான் கையெழுத்து போடுவார். பி.வா.சா.ஆ.28 கையெழுத்து என்னுடைய தகப்பனார் கையெழுத்து. எந்த தந்தை வேறு இடங்களில் கையெழுத்து போட்டுள்ளதை நான் பார்த்துள்ளேன். என் 09.02.2010ம் தேதி காலமானார். என்னுடைய தந்தையின் கையெழுத்து இது தான் என்று நிறுபிக்கும் பொறுட்டு நான் வேறு எந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.28–ல் உள்ள கையெழுத்து என் தந்தையின் கையெழுத்து இல்லை என்றாலும், என் தந்தையின் கையெழுத்து எனக்கு சரியாக தெரியவில்லை என்றாலும், முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.10.23 17:06:58 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.